# இயல் 7.5 - வடிவியல்

பயிற்சி எண் :: 7.5.1.1.A


வடிவியல் (Geometry) - கோடு - மீள்பார்வை - வரையறை

## வடிவியல் (Geometry) - கோடு - மீள்பார்வை - வரையறை


6-ஆம் வகுப்பின் நாம் கற்ற வடிவியல் சார்ந்த கருத்துக்கள் மற்றும் வரையறைகளை இங்கு சற்றே நினைவு கூர்வோம்.




ஒரு **நேர்கோடு** என்பது $A$ மற்றும் $B$ எனும் இரு புள்ளிகளின் வழியாக இருபுறமும் முடிவில்லாமல் நீண்டு செல்லும் ஒரு வடிவமாகும். அதை $\overleftrightarrow{AB}$ என பெரிய ஆங்கில எழுத்துக்களின் மேல் அம்புக் குறியிட்டுக் குறிப்பிடுகின்றோம்.





ஒரு நேர்கோட்டின் $A$ மற்றும் $B$ எனும் இரு புள்ளிகளுக்கிடையில் வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியை நான் **கோட்டுத்துண்டு** என்றழைக்கிறோம். அதனை $\overline{AB}$ என பெரிய ஆங்கில எழுத்துக்களின் மேல் கோடிட்டு குறியிட்டுக் குறிப்பிடுகின்றோம். அதன் நீளத்தை $p$ $q$ $r$ போன்ற சிறிய ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடுகின்றோம்.





ஒரு **கதிர்** என்பது $A$ எனும் புள்ளியில் தொடங்கி $B$ எனும் புள்ளி வழியாக ஒரு குறிப்பிட்ட திசையில் முடிவில்லாமல் நீண்டுகொண்டு செல்லும் ஒரு வடிவம் ஆகும். அதை $\overrightarrow{AB}$ என பெரிய ஆங்கில எழுத்துக்களின் மேல் ஒரு திசையில் உள்ள அம்புக் குறியிட்டுக் குறிப்பிடுகின்றோம்.




$\overleftrightarrow{AB}$ மற்றும் $\overleftrightarrow{CD}$ எனும் இரு கோடுகள் இணையானைவை எனில் அவை ஒரு பொழுதும் ஒன்றுக்கொன்று வெட்டிக்கொள்ளாது. இணைகோடுகளை $\overleftrightarrow{AB} \| \overleftrightarrow{CD}$ எனக் குறிப்பிடுவோம்.




இரு கோடுகள் இணைகோடுகள் அல்ல எனில் அவை ஏதாவது ஒரு புள்ளியில் வெட்டிக்கொள்ளும். அதனை **வெட்டும் புள்ளி** எனவும் அக்கோடுகளை **வெட்டும் கோடுகள்** எனவும் கூறுகின்றோம்.




மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமைந்தால் அப்புள்ளிகளை **ஒருகோடமைப்புள்ளிகள்** எனக் குறிப்பிடுகின்றோம்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/DxpV-qQFJeY

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 16th January, 2023 :: 11:29 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**